Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 56/2023 and 206/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பிரகாஷ் |
| Father/Husband Name | : | துரைராஜ் |
| Village | : | வாலாந்தரவை, இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலித்தொழில் |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.01.2026

(1 முதல் 5, 7, 9 முதல் 11 எதிரிகள் ஆஜர். 8ம் எதிரி காணொளி மூலம் மதுரை மத்திய சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டர். மற்ற எதிர்கள் ஆஜரில்லை, மற்ற எதிரிகள் தரப்பில் BNSS –355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம் வாலாந்தரவை கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன கார்த்திக், விக்னேஷ்பிரபு ஆகியோர்களை தெரியும். சாட்சிகள் தர்மா, சுரேஷ் ஆகியோர்களை தெரியும். சாட்சி பாபுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளான அதிசயபாண்டியன், குணசேகரன், தங்கசெல்வன், பெருமாள்சாமி ஆகியோர்களை தெரியாது. 6ம் எதிரி

அர்ஜீனன் மற்றும் காணொளி வாயிலாக மதுரை மத்திய சிறையில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டுள்ள பாஸ்கரனை தெரியும். கார்த்திக் மற்றும் விக்னேஷ் பிரபுவும் யாரால் எப்போது, எங்கு வைத்து தாக்கப்பட்டார்கள் என்ற விவரம் நேரடியாக தெரியாது. அ.சா.1 தர்மா என்பவர் கொடுத்த புகார் சம்மந்தமாகவும் நேரடியாக தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 16.10.2018ம் தேதி கார்த்திக் ஒரு கொலை முயற்சி வழக்கு சம்மந்தமாக கேணிக்கரை காவல் நிலையத்தில் மாலை 05.00 மணிக்கு நிபந்தனை கையொப்பமிட சென்றிருந்தார் என்றும், அவருடன் வழக்கில் இறந்துபோன விக்னேஷ்பிரபு, நான், பாபு ஆகியோர்கள் உடன் சென்றோம் என்றும், நிபந்தனை கையொப்பமிட கார்த்திக்கும், விக்னேஷ் பிரபுவும் கேணிக்கரை காவல் நிலையத்திற்குள் சென்றார்கள் என்றும், அப்போது நானும், பாபுவும் டீக்கடைக்கு டீ சாப்பிட சென்றிருந்தோம் என்றும், எங்களுக்கு முன்னால் கார்த்திக்கும், விக்னேஷ் பிரபுவும் மல்லம்மாள் கோவில் ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது மல்லம்மாள் கோவில் உள்ள ரோட்டில் ஆஜர் எதிரிகளான சந்திரன், பூமிநாதன், சரவணன், மற்றொரு பூமிநாதன், அர்ஜீனன், குண்டு பாஸ்கரன், பாஸ் என்கிற பாஸ்கரன் ஆகியோர்கள் ஒரு பச்சைகலர் குவாலிஸ் காரிலும், இரண்டு இருசக்கரவாகனத்திலும் இறங்கினார்கள் என்றும், அவர்களுடன் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மூன்று நபர்களும் இறங்கி கார்த்திக் மீது வெடிகுண்டை வீசினார்கள் என்றும், இதில் கீழேவிழுந்த கார்த்திக்கை எல்லோரும் அருவாளால் மாறிமாறி வெட்டினார்கள் என்றும், இதைப்பார்த்த நாங்கள் வெட்டிவிடுவார்கள் என்று மறைந்திருந்து பார்த்தோம் என்றும், கார்த்திக்குடன் வந்த விக்னேஷ்பிரபு பயந்து ரோட்டில் ஓடினார் என்றும், அவரையும் அதே எதிரிகள் ஆயுதங்களுடன் விரட்டி DIG அலுவலக கிழக்கு காம்பவுண்ட் அருகில்வைத்து அருவாளால் தாக்கினார்கள் என்றும், மேற்சொன்ன விவரத்தை சுரேஷ், அவரது மைத்துனர் தர்மாவுக்கும், அவரது மனைவி மற்றும் உறவினர்களுக்கும் தகவல் சொன்னார் என்றும், பிறகு காயம்பட்டு கிடந்த கார்த்திக்கை நாங்கள் போய்பார்த்தபோது அவரது உடல் முழுவதும், கழுத்து, கை, கால்,

தோள்பட்டை ஆகிய இடங்களில் பலத்தகாயம் ஏற்பட்டு பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தார் என்றும், DIG அலுவலக கிழக்கு காம்பவுண்டு அருகில் கிடந்த விக்னேஷ் பிரபுவை பார்த்தபோது இடதுகை மணிக்கட்டு, வலதுகை மணிக்கட்டு துண்டாகி அவரும் எந்தவித பேச்சு மூச்சின்றி கிடந்தார் என்றும், சிறிது நேரத்திலேயே அ.சா.1 தர்மா அங்கு வந்துவிட்டார் என்றும், உடனே அங்கிருந்தவர்கள் அம்சா ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டுகிடந்த இருவரையும் இராமநாதபுரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம் என்றும், அவர்கள் இருவரையும் பரிசோதித்த மருத்துவர் அவர்கள் இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் எனவும், இது சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அ.சா.1 தர்மா கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், உறவுக்காரர்கள் என்பதால் தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 56/2023 and 206/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பாபு |
| Father/Husband Name | : | துரைராஜ் |
| Village | : | வாலாந்தரவை, இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலித்தொழில் |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.01.2026

<u>(1 முதல் 5, 7, 9 முதல் 11 எதிரிகள் ஆஜர். 8ம் எதிரி காணொளி மூலம் மதுரை மத்திய சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டர். மற்ற எதிர்கள் ஆஜரில்லை, மற்ற எதிரிகள் தரப்பில் BNSS –355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம் வாலாந்தரவை கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன கார்த்திக், விக்னேஷ்பிரபு ஆகியோர்களை தெரியும். சாட்சிகள் தர்மா, சுரேஷ் ஆகியோர்களை தெரியும். சாட்சி பிரகாசை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளான அதிசயபாண்டியன், குணசேகரன், தங்கசெல்வன், பெருமாள்சாமி ஆகியோர்களை தெரியாது. 6ம் எதிரி

அர்ஜீனன் மற்றும் காணொளி வாயிலாக மதுரை மத்திய சிறையில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டுள்ள பாஸ்கரனை தெரியும். கார்த்திக் மற்றும் விக்னேஷ் பிரபுவும் யாரால் எப்போது, எங்கு வைத்து தாக்கப்பட்டார்கள் என்ற விவரம் நேரடியாக தெரியாது. அ.சா.1 தர்மா என்பவர் கொடுத்த புகார் சம்மந்தமாகவும் நேரடியாக தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

போலிஸ் விசாரணையில் கடந்த 16.10.2018 ம் தேதி கார்த்திக் ஒரு கொலை முயற்சி வழக்கு சம்மந்தமாக கேணிக்கரை காவல் நிலையத்தில் மாலை 05.00 மணிக்கு நிபந்தனை கையொப்பமிட சென்றிருந்தார் என்றும், அவருடன் வழக்கில் இறந்துபோன விக்னேஷ்பிரபு, நான், பிரகாஷ் ஆகியோர்கள் உடன் சென்றோம் என்றும், நிபந்தனை கையொப்பமிட கார்த்திக்கும், விக்னேஷ் பிரபுவும் கேணிக்கரை காவல் நிலையத்திற்குள் சென்றார்கள் என்றும், அப்போது நானும், பிரகாசும் டீக்கடைக்கு டீ சாப்பிட சென்றிருந்தோம் என்றும், எங்களுக்கு முன்னால் கார்த்திக்கும், விக்னேஷ் பிரபுவும் மல்லம்மாள் கோவில் ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது மல்லம்மாள் கோவில் உள்ள ரோட்டில் ஆஜர் எதிரிகளான சந்திரன், பூமிநாதன், சரவணன், மற்றொரு பூமிநாதன், அர்ஜீனன், குண்டு பாஸ்கரன், பாஸ் என்கிற பாஸ்கரன் ஆகியோர்கள் ஒரு பச்சைகலர் குவாலிஸ் காரிலும், இரண்டு இருசக்கரவாகனத்திலும் இறங்கினார்கள் என்றும், அவர்களுடன் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மூன்று நபர்களும் இறங்கி கார்த்திக் மீது வெடிகுண்டை வீசினார்கள் என்றும், இதில் கீழேவிழுந்த கார்த்திக்கை எல்லோரும் அருவாளால் மாறிமாறி வெட்டினார்கள் என்றும், இதைப்பார்த்த நாங்கள் வெட்டிவிடுவார்கள் என்று மறைந்திருந்து பார்த்தோம் என்றும், கார்த்திக்குடன் வந்த விக்னேஷ்பிரபு பயந்து ரோட்டில் ஓடினார் என்றும், அவரையும் அதே எதிரிகள் ஆயுதங்களுடன் விரட்டி DIG அலுவலக கிழக்கு காம்பவுண்ட் அருகில்வைத்து அருவாளால் தாக்கினார்கள் என்றும், மேற்சொன்ன விவரத்தை சுரேஷ், அவரது மைத்துனர் தர்மாவுக்கும், அவரது மனைவி மற்றும் உறவினர்களுக்கும் தகவல் சொன்னார் என்றும், பிறகு காயம்பட்டு கிடந்த கார்த்திக்கை நாங்கள் போய்பார்த்தபோது அவரது உடல் முழுவதும், கழுத்து, கை, கால்,

தோள்பட்டை ஆகிய இடங்களில் பலத்தகாயம் ஏற்பட்டு பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தார் என்றும், DIG அலுவலக கிழக்கு காம்பவுண்டு அருகில் கிடந்த விக்னேஷ் பிரபுவை பார்த்தபோது இடதுகை மணிக்கட்டு, வலதுகை மணிக்கட்டு துண்டாகி அவரும் எந்தவித பேச்சு மூச்சின்றி கிடந்தார் என்றும், சிறிது நேரத்திலேயே அ.சா.1 தர்மா அங்கு வந்துவிட்டார் என்றும், உடனே அங்கிருந்தவர்கள் அம்சா ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டுகிடந்த இருவரையும் இராமநாதபுரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம் என்றும், அவர்கள் இருவரையும் பரிசோதித்த மருத்துவர் அவர்கள் இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் எனவும், இது சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அ.சா.1 தர்மா கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், உறவுக்காரர்கள் என்பதால் தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 56/2023 and 206/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சுரேஷ் |
| Father/Husband Name | : | களஞ்சியம் |
| Village | : | ஓம்சக்திநகர், இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | ரியல்எஸ்டேட் |
| Religion | : | |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.01.2026

(1 முதல் 5, 7, 9 முதல் 11 எதிரிகள் ஆஜர். 8ம் எதிரி காணொளி மூலம் மதுரை மத்திய சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டர். மற்ற எதிர்கள் ஆஜரில்லை, மற்ற எதிரிகள் தரப்பில் BNSS –355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஓம்சக்தி நகரில் வசித்து ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 தர்மா எனது மைத்துனர் ஆவார். இறந்துபோன கார்த்திக் எனது மற்றொரு மச்சினன் ஆவார். இறந்துபோன விக்னேஷ்பிரபுவை தெரியாது. சாட்சிகள் ரமேஸ், பாபு ஆகீயோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளான அதிசயபாண்டியன், குணசேகரன், அர்ஜீனன்,

தங்கசெல்வன், பெருமாள்சாமி, பாஸ்கரன் ஆகியோர்களை தெரியாது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என் மைத்துனர் கார்த்திக் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவர் எவ்வாறு, யாரால்தாக்கி இறந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. விக்னேஷ்பிரபு எவ்வாறு, யாரால்தாக்கி இறந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. கார்த்திக் மற்றும் விக்னேஷ்பிரபு இறந்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 தர்மா புகார்கொடுத்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 16.10.2018ம் தேதி நான் ஒரு வழக்கு சம்மந்தமாக கேணிக்கரை காவல் நிலையத்தில் மாலை 05.00 மணிக்கு நிபந்தனை கையொப்பமிட சென்றிருந்தேன் என்றும், அப்போது என் இளைய மைத்துனர் கார்த்திக் என்பவரும் ஒருகொலை முயற்சி வழக்கு சம்மந்தமாக பிணையில் வந்து கேணிக்கரை காவல் நிலையத்தில் தினமும் காலை 10.30 மணிக்கும், மாலை 05.00 மணிக்கும் நிபந்தனை கையெழுத்து போட்டு வந்தார் என்றும், அப்போது அங்கு மாலை 05.00 மணியளவில் என் மைத்துனர் கார்த்திக்கும், விக்னேஷ்பிரபுவும் கேணிக்கரை காவல் நிலையத்தில் நிபந்தனை கையெழுத்து செய்து வெளியே போனார்கள் என்றும், அப்போது மல்லம்மாள் கோவில் உள்ள ரோட்டில் ஆஜர் எதிரிகளான சந்திரன், பூமிநாதன், சரவணன், மற்றொரு பூமிநாதன், அர்ஜீனன், குண்டு பாஸ்கரன், பாஸ் என்கிற பாஸ்கரன் ஆகியோர்கள் ஒரு பச்சைகலர் குவாலிஸ் காரிலும், இரண்டு இருசக்கரவாகனத்திலும் இறங்கினார்கள் என்றும், அவர்களுடன் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மூன்று நபர்களும் இறங்கி எனது மைத்துனர் கார்த்திக் மீது வெடிகுண்டை வீசினார்கள் என்றும், இதில் கீழேவிழுந்த என் மைத்துனர் கார்த்திக்கை எல்லோரும் அருவாளால் மாறிமாறி வெட்டினார்கள் என்றும், இதைப்பார்த்த நாங்கள் வெட்டிவிடுவார்கள் என்று மறைந்திருந்து பார்த்தோம் என்றும், கார்த்திக்குடன் வந்த விக்னேஷ்பிரபு பயந்து ரோட்டில் ஓடினார் என்றும், அவரையும் அதே எதிரிகள் ஆயுதங்களுடன் விரட்டி DIG அலுவலக கிழக்கு காம்பவுண்ட் அருகில்வைத்து அருவாளால் தாக்கினார்கள் என்றும், மேற்சொன்ன விவரத்தை என்

மைத்துனர் தர்மாவுக்கும், எனது மனைவி மற்றும் உறவினர்களுக்கும் தகவல் சொன்னேன் என்றும், பிறகு காயம்பட்டு கிடந்த கார்த்திக்கை பார்த்தபோது அவரது உடல் முழுவதும், கழுத்து, கை, கால், தோள்பட்டை ஆகிய இடங்களில் பலத்தகாயம் ஏற்பட்டு பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தார் என்றும், DIG அலுவலக கிழக்கு காம்பவுண்டு அருகில் கிடந்த விக்னேஷ் பிரபுவை பார்த்தபோது இடதுகை மணிக்கட்டு, வலதுகை மணிக்கட்டு துண்டாகி அவரும் எந்தவித பேச்சு மூச்சின்றி கிடந்தார் என்றும், சிறிது நேரத்திலேயே எனது மைத்துனர் அங்கு வந்துவிட்டார் என்றும், உடனே அங்கிருந்தவர்கள் அம்சா ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டுகிடந்த இருவரையும் இராமநாதபுரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம் என்றும், அவர்கள் இருவரையும் பரிசோதித்த மருத்துவர் அவர்கள் இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் எனவும், இது சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க என் மைத்துனர் தர்மா கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், உறவுக்காரர்கள் என்பதால் தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.